22. முல்லைப்பாட்டின் அமைப்பையும் அதன் சிறப்புகளையும் விவரி.

23. "காலமறிதல்" என்னும் அதிகாரத்தில் அறக்கருத்துகளை ஆராய்க.

24. ஒற்று மிகா இடங்களைச் சான்று தந்து விளக்கு.

---



Tamil –

APRIL 2023

# 71302/LA12A/ DA12A

Time : Three hours  Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

1. எட்டுத்தொகை அகநூல்களைக் குறிப்பிடுக.

2. நற்றிணையைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாவர்?

3. பா வகையால் பெயர் பெறும் நூல் எது?

4. கிள்ளைப் பத்து என்றால் என்ன?

5. புறநானூற்றின் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

6. "கோடியர் முழவின் முன்னர்"— இக்கூற்றில் 'கோடியர்' யார்?

7. பரிபாடலில் இடம் பெறும் பா வகைகளை எழுதுக.

8. ஆற்றுப்படை இலக்கியங்களைக் கூறுக.

9. முல்லைப்பாட்டு – பெயர்க்காரணம் தருக.

10. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெறும் நீதி நூல்களைப் பட்டியலிடுக.

11. "வல்லான் அல்லான்; வாழ்க அவன் கண்ணி!" இத்தொடரில் 'வாழ்க' என்பதன் இலக்கணக் குறிப்புத் தருக.

12. 'தேசபக்தி' – வலிமிகாமைக்குக் காரணம் தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக.

13. நற்றிணையில் சிறைப்புறமாகத் தோழி, தலைவிக்கு சொல்லியவற்றை விளக்குக.

14. கலித்தொகையில் இடம்பெறும் "அரிதாய அறன் எய்தி" என்ற பாலைக்கலி பாடலை விளக்குக.

15. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வெற்றிச் சிறப்பை பதிற்றுப்பத்து வழி எடுத்துரைக்க.

16. முல்லைப்பாட்டில் தலைவனது பிரிவினால் தலைவி பெற்ற துயரத்தை எழுதுக.

17. நாலடியாரில் இடம்பெறும் அறக்கருத்துக்களைப் புலப்படுத்துக.



18. முச்சங்க வரலாற்றினைச் சுருக்கி எழுதுக.

19. தமிழ் மரபுத் தொடர்களைக் கண்டறிக.

(அ) நிறையச் சம்பாதித்தல்.

(ஆ) போருக்கு அழைத்தல்

(இ) மதிப்பில்லாதவன்

(ஈ) பொய்காரன்

(உ) அலட்சியம் செய்தல்

(ஊ) முடிவுகட்டுதல்

(எ) தந்திரம்

(ஏ) நிரப்பாத கல்வி

(ஐ) பின்பற்றுதல்

(ஒ) அளவுக்கு மேல் செலவு செய்தல்

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள குறுந்தொகைப் பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

21. ஐங்குறுநூறு "கிள்ளைப் பத்தில்" இடம் பெறும் பாடற்நயத்தினை விரிவாகக் கூறுக.